தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.14387/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 24.09..2009</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. கே. பிரபு<br>த/பெ. வி. குப்புசாமி<br>2/34, தாமிரபரணி தெரு<br>அண்ணா நகர், தரமணி<br>சென்னை – 113. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>மேலாண்மை இயக்குநர் அலுவலகம்<br>பல்லலன் போக்குவரத்து கன்சல்டன்சி சர்வீசஸ் லிட்<br>MTC பஸ் டெர்மினஸ் காம்ளக்ஸ், கலைஞர் நகர்<br>சென்னை – 78. |

----------

இவ்வாணையத்தில் இன்று (24.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. கே. பிரபு அவர்களும், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் வரவில்லை.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 29.01.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் 21 இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப் பெறாததால், சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 28.3.09 அன்று மேல்முறையீட்டு அலுவலருக்கு முதல் மேல்முறையீடு செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 20.4.09 அன்று மனுதாரருக்கு தகவலை வழங்கியுள்ளார். வழங்கிய தகவல் சரியில்லையென்று, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 23.06.09

அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவலை வழங்கவில்லையென்று இவ்வாணைத்தின் முன் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய 21 இனங்களுக்கும் அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவலை இவ்வாணை கிடைத்த ஒரு வாரத்திற்குள் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலை இவ்வாணையத்திற்கு இரண்டு வாரத்திற்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

இன்று நடைபெற்ற விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலருக்கு சம்மன் அனுப்பியிருந்தும் வராததற்கும் மற்றும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்காததற்காக பொதுத் தகவல் அலுவலர் மீது சட்டப்பிரிவு 20(1)ன் கீழ் ஏன் அதிகபட்சமாக ரூ.25,000/– அபராதம் விதிக்கக்கூடாது என்பதற்கும் சட்டப்பிரிவு 20(2)ன் கீழ் ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கும் உள்ள விளக்கத்தினை மேலாண்மை இயக்குநர், பல்லவன் போக்குவரத்து கன்சல்டன்சி சர்வீசஸ் லிட், கே.கே. நகர், சென்னை – 78 அவர்களின் மூலமாக இவ்வாணை கிடைத்த ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 06.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.14387/09</u>
மேலாண்மை இயக்குநர்
பல்லலன் போக்குவரத்து கன்சல்டன்சி சர்வீசஸ் லிட்
MTC பஸ் டெர்மினஸ் காம்ளக்ஸ், கலைஞர் நகர்
சென்னை – 78.

பொதுத் தகவல் அலுவலர்
மேலாண்மை இயக்குநர் அலுவலகம்
பல்லலன் போக்குவரத்து கன்சல்டன்சி சர்வீசஸ் லிட்
MTC பஸ் டெர்மினஸ் காம்ளக்ஸ், கலைஞர் நகர்
சென்னை – 78.

திரு. கே. பிரபு, த/பெ. வி. குப்புசாமி
2/34, தாமிரபரணி தெரு
அண்ணா நகர், தரமணி
சென்னை – 113.